

# தங்கம் தலை காக்கும்!

**செய்கூலி, சேதாரம் வசூலிக்காத**
**ஏ.ஜி.எஸ் தங்க மாளிகை**
**திருச்சி**

**'பணத்தை எப்படியெல்லாம் மிச்சப்படுத்தலாம்?'** என்பதுதான் 2020-ல் சாமானிய மனிதனுக்கு தேவைப்படும் அறிவாக இருக்கிறது. வைரஸ் வந்தாலும் சரி, வரக்கூடாத எந்தப் பிரச்னை வந்தாலும் சரி, சிக்கனமாக குடும்பம் நடத்தினால் எக்கனத்தையும் தாங்கிக்கொள்ளலாம் என்பது பெரும்பான்மை இந்தியர்கள் அறிந்து வைத்திருக்கும் வாழ்க்கைக் கலை. இவ்வாறு, எப்படிப்பட்ட நேரத்திலும் 'சேமிப்பு நம்மைக் காப்பாற்றும்' எனத் தெம்பாக இருக்கும் மத்திய ரக குடும்பங்களின் மந்திரச் சாவிதான் 'தங்கம்'.

மனைவிக்கு நகை வாங்கிக் கொடுப்பதில் பரஸ்பரம் அன்பு வளர்வது நிச்சயம் என்றாலும், ஒரே கல் கொண்டு 'சேமிப்பு/முதலீடு' எனும் இரண்டாவது மாங்காயையும் அடிக்க முடியும் என்பதை உணர்ந்துகொள்ளுங்கள் கணவர்களே! ஏனெனில், கடந்த ஆறு மாதங்களில் மட்டும் தங்கத்தின் விலை கிட்டத்தட்ட 40% அதிகரித்துவிட்டது!

## இங்கே மட்டும் கூட்டம் குறைவதில்லை!

தங்க விலை உயர்வு, வைரஸ், ஊரடங்கு - இதெல்லாம் ஒரு பக்கம் போய்க்கொண்டிருந்தாலும், திருச்சி தென்னூர் பிரதான சாலையில் உள்ள 'ஏ.ஜி.எஸ் தங்க மாளிகை'யில் மட்டும் மக்கள் தலைகள், அலை போல ஆர்ப்பரிக்கின்றன. முட்டி மோதி, உள்ளே சென்று விசாரித்தால் ஆச்சரியப்படுத்தும் ஓர் அறிவிப்பு:

'நகைகளுக்கு செய்கூலியும் கிடையாது, சேதாரமும் கிடையாது!'

யார் இந்த ஏ.ஜி.எஸ் நிறுவனத்தார்... விலை மலிவாகக் கொடுப்பது எப்படி சாத்தியம் என்கிற கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்கிறார், அதன் நிறுவனர் ஆனந்தன்.

## யார் இந்த ஏ.ஜி.எஸ். நிறுவனத்தார்?

"1980-களிலிருந்து திருச்சி மாநகரத்தில் வெள்ளிப் பொருள்கள் தயாரிப்பு மற்றும் விற்பனையில் ஈடுபட்டுவருகிறோம். 90-களின் ஆரம்பத்தில் தங்க நகைகளைக் தயாரித்து மொத்த விற்பனை செய்ய ஆரம்பித்தோம். 1998 முதல் தமிழகம் முழுக்க பல முன்னணி நகைக் கடைகளுடன் மொத்த நகை வியாபாரத்தில் ஈடுபட்டு வருகிறோம். இந்நிலையில் 2015-ல் திருச்சி 'உறையூர்' பகுதியில் எங்களின் 'ஆனந்த் ஜுவல்லர்ஸ்' நேரடி விற்பனை நிலையத்தை ஆரம்பித்தோம். தொடர்ந்து தற்போது 2020-ல் திருச்சியில் 'ஏ.ஜி.எஸ் தங்க மாளிகை'யைத் துவங்கியுள்ளோம்."

## செய்கூலி, சேதாரம் இல்லையா? இது எப்படி சாத்தியம்?

''தினந்தோறும் ஏ.ஜி.எஸ்ஸிற்குள் அடியெடுத்து வைக்கும் வாடிக்கையாளர்களின் கேள்வியும் இதுதான். காரணம் செய்கூலி மற்றும் சேதாரம் - இதில்தான் நகைக்கடையின் லாபம் உள்ளது என்பது அவர்களின் கருத்தாக இருக்கிறது. காலம் காலமாக அப்படித்தான் நகை வாங்கி இருக்கிறார்கள். நகை செய்வதற்கு கூலி, நகை செய்யும்போது ஏற்படும் உலோக இழப்பு - இந்தத் தொகையை வாடிக்கையாளர்களிடமிருந்து நகைக்கடைகள் வசூலிக்கின்றன. இந்தக் கட்டணத்தை முடிவு செய்வது நகைக்கடைகளே என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். பொதுவாக 8% - 25% வரை வசூலிக்கப்படும். இதை முற்றிலும் தவிர்க்க முடியுமா? என்பதுதான் அனைவரின் கேள்வியுமே!''

''முடியும். நகைகளை வேறு ஒருவரிடமிருந்து கொள்முதல் செய்து விற்காமல், நாமே தயாரித்து விற்றால் இது சாத்தியம்தான்! அதைத்தான் செய்கிறது ஏ.ஜி.எஸ். தங்க மாளிகை!''

## இதனால் லாபம் குறையுமே?

''விலையைக் குறைத்து மக்களைக் கவர்வது என்பது ஏ.ஜி.எஸ்ஸின் சிறப்பம்சம். மொத்தமாக நகைகளைத் தயாரித்து, கடைகளுக்குக் கொடுப்பதற்கு பதிலாக அதை நேரடியாக வாடிக்கையாளர்களுக்கே கொடுப்பதால், செய்கூலி மற்றும் சேதாரக் கட்டணத்தைத் தள்ளுபடி செய்ய முடிகிறது. இவ்வளவுதான் சூட்சுமம். இதனால் வாடிக்கையாளர்கள் தங்கள் பணத்தை அதிக அளவில் மிச்சப்படுத்த முடிகிறது. லாபம் குறைவு என்றாலும் தொடர்ந்து வாடிக்கையாளர்கள் வரத்தினால், தேவையான லாபம் ஈட்டுவது சாத்தியமாகிறது'' என விளக்கமளிக்கிறார் ஆனந்தன்.

## மறைமுகக் கட்டணம் ஏதாவது உண்டா?

''பாரம்பர்ய நகைகள், அதாவது ஆண்டிக் கலக்ஷன்ஸ்க்கு மட்டும், கிராமுக்கு ரூபாய் 150 முதல் 200 வரை, மிகக்குறைந்த அளவிலான செய்கூலி உண்டு, காரணம் இவற்றைச் செய்ய ஏற்படும் நேரம் மிக அதிகம். இதுபோன்று காஸ்டிங் (Casting) நகைகளுக்கும் செய்கூலி உண்டு. மற்றபடி அனைத்து நகைகளையும் அன்றைய நாளின் தங்கத்தின் விலையில் வாங்கிச் செல்லலாம். மேற்படி, ஜி.எஸ்.டி வரி உண்டு, அது இல்லாமல் எப்படி!''

## தங்கத்தின் தரம் எப்படி?

''916 ஹால்மார்க் நகைகளையே ஏ.ஜி.எஸ்-ல் விற்பனை செய்கிறோம். தங்கத்தின் தூய்மையைப் பரிசோதனை செய்ய 'கேரட் மீட்டர் (Carat Meter)' உள்ளது. நீங்கள் வாங்கும் நகையின் நம்பகத்தன்மையை கேரட் மீட்டர் மூலம் துல்லியமாகத் தெரிந்துகொள்ளலாம்!"

## மொத்தமாக நகை வாங்குபவர்களுக்கு லாபமா?

''ஆம். திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகளுக்கு நகை வாங்க வருவோர் குறைந்தது 10 சவரன் நகை வாங்கினால், தோராயமாக 40,000 ரூபாய் வரை மிச்சப்படுத்தலாம். இதனால் திருச்சி மட்டுமல்லாது தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்தும், கார் எடுத்துக்கொண்டு நகை வாங்க வரும் குடும்பங்களை ஏ.ஜி.எஸ்ல் காண முடிகிறது. வாகனச் செலவை விட, செய்கூலி சேதார தள்ளுபடியில் லாபம் இருப்பதால்தான் மக்கள் வரத்து அதிகரித்துள்ளது'' என்கிறார் ஆனந்தன்.



**ஆனந்தன்**
நிறுவனர்
ags தங்கமாளிகை

## தங்கத்தின் விலை குறித்து உங்களின் பார்வை என்ன?

''கடந்த சில நாட்களாக தங்கத்தின் விலை இறக்கம் கண்டுள்ளது. தங்கமோ, பிற எந்த முதலீடோ, விலை குறையும்போது வாங்கி வைத்துக்கொள்வது நல்லது. தங்கத்தின் விலையில் வீழ்ச்சி தென்பட்டாலும், நீண்ட காலப்போக்கில் வீழ்ச்சியைக் காட்டிலும் குறைந்தது இரண்டிலிருந்து நான்கு மடங்கு விலை அதிகரித்துவிடும் என்பதே அனுபவப் பூர்வமான உண்மை. அதனால் என்றுமே தங்கம் வாங்குவது நல்லது. மேலும் இனி திருமண சீசன் ஆரம்பிக்க இருப்பதால், விலை அதிகரிக்கவே நிறைய வாய்ப்புள்ளது.''

## ஏ.ஜி.எஸ்.-ல் என்னென்ன கலெக்ஷன்ஸ் இருக்கின்றன?

''எங்களிடம் 250 நகைக் கலைஞர்கள் வேலை பார்க்கின்றனர். அதனால் நிறைய கலக்ஷன்ஸ் வழங்குகிறோம். தமிழ்நாடு, மும்பை, கொல்கத்தா, கோவை என ஊர்கள் சார்ந்த நகைத் தொகுப்புகள் இங்கே இடம்பெறுகின்றன. பணத்தை மிச்சப்படுத்த மட்டுமின்றி மனதிற்கு பிடித்த நகைகளை இங்கே வாங்க முடியும். நம் ஊரில் ஒவ்வொரு சமூக மக்களும் ஒவ்வொரு விதமான நகைகளை விரும்புகின்றனர். அனைவருக்கும் ஏற்ற வகையில் நகை வகைகள் இங்கு காணப்படுகின்றன.''

## ஏ.ஜி.எஸ்-ஸின் வேறு சிறப்பம்சங்கள் என்னென்ன?

''வெள்ளிப் பொருள்களுக்கும் இங்கு செய்கூலி சேதாரம் கிடையாது. வெள்ளி வாங்கினால் கிராமுக்கு ரூ.5 (அ) கிலோவுக்கு 5000 ரூபாய் தள்ளுபடி வழங்குகிறோம்!''

AGS/20